DEPOSITION OF WITNESS
Chapter XXIII Code of Criminal Procedure
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE III, TIRUCHIRAPPALLI.
Present : Thiru. S.Mohamed Suhail B.A,B.L.
Judicial Magistrate III, Tiruchirappalli.
STC No. 430/2024

Deposition of witness for PW 2

| | | |
|---|---|---|
| Name | : | குமார் |
| Son of | : | தங்கராஜ் |
| Village | : | வளநாடு |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | 38/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of OATHS Act of 1969 on the day 16.07.2026.

எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை அரசு தரப்பில்**

நான் வளநாடு, மணப்பாறையில் வசித்து வருகிறேன். இவ்வழக்கின் புகார்தாரர் தனசேகரன் எனது உறவினர் ஆவார். எனது நண்பர் கண்ணன் என்பவர் மூலமாக அவரது மனைவி எதிரி உமாமகேஸ்வரி கடன் பிரச்சினை மற்றும் தொழிலுக்காக அவரச தேவைக்காக ரூ.10,00,000 என்னிடம் கேட்டார்கள். என்னிடம் அப்போது போதிய பணமில்லை அதனால் எனது நெருங்கிய உறவினர் தனசேகரிடம் அறிமுகப்படுத்தினேன். அவரும் மேற்படி உமாமகேஸ்வரி மற்றும் அவரது கணவர் கேட்டு கொண்டதற்கு இணங்க அவரது நகைகளை அடகு வைத்ததன் மூலம் 15.09.2022 அன்று பணம் 10,00,000 ரூபாயை 12 சதவீத வட்டி வீதத்தில் கொடுத்தார். அதற்கு அன்றைய தினமே அனைவரின் முன்னிலையில் கடனுறுதி சீட்டு ஏற்படுத்தப்பட்டது. அதில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். பிறகு கடன் வாங்கி ஒரு மாதத்திற்கு மட்டும் வட்டி கொடுத்தார். அதன் பிறகு பலமுறை கேட்டும் எந்த பணமும் கொடுக்கவில்லை. பிறகு 16.09.2023 தேதியிட்ட காசோலையை 12.09.2023 அன்று எங்களிடம் எதிரி உமாமகேஸ்வரி கொடுத்தார். பிறகு மேற்படி காசோலை போதிய பணம் இல்லாத காரணத்தினால் திருப்பப்பட்டதால் எனது உறவினர் தனசேகரன் வழக்கு தாக்கல் செய்தார்.

எதிரி  தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய கேட்டு கொண்டதற்கு இணங்க 14.08.2026 அன்று ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken over by me in open court read over of the witness and admitted by the witness to be correct

MOHAMED SUHAIL SALEEM

Digitally signed by MOHAMED SUHAIL SALEEM
Date: 2026.07.16 18:27:12 +0530

Judicial Magistrate III,
Tiruchirappalli.